# BSNLEU &TNTCWU தமிழ் மாநில சங்கங்கள்

சுற்றறிக்கை எண்:64 11-11-2009

## எழுச்சி மிகு உண்ணாவிரதப் போராட்டம்....

அன்புமிக்க தோழரே,

வணக்கம். இருமாநிலச் செயலர்களும் ஒப்பந்த ஊழியர் பிரச்சனைக்காக சென்னை தலைமை பொது மேலாளர் அலுவலகம் முன்பாக 10.11.09 அன்று உண்ணாவிரதம் இருந்தனர். கடலூர், புதுவை, வேலூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து 250 தோழர்களும், சென்னையிலிருந்து 150 தோழர்களும் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். இதில் 50 பெண்களும் கலந்து கொண்டது சிறப்பு அம்சமாகும்.

கொட்டும் மழையிலும் உண்ணாவிரதப் போராட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது. BSNLEU மாநில உதவி தலைவர் தோழியர். பிரேமா, ஒப்பந்த ஊழியர் சங்க மாநில உதவி தலைவர் தோழர் மாணிக்கமூர்த்தி தலைமை தாங்கினர். மாநில நிர்வாகிகளும், மாவட்ட செயலர்களும் எழுச்சிமிகு உரையாற்றினர். NFTE ஒப்பந்த ஊழியர் சங்க தமிழ் மாநில செயலர் தோழர். தமிழ்மணி வாழ்த்துரை வழங்கினார். மாநில முதன்மை பொது மேலாளர் திரு. சண்முகசுந்தரம் உள்ளிட்ட அதிகாரிகள் நம்மை பேச்சுவார்த்தைக்கு அழைத்தனர். தோழர்கள் செல்லப்பா, முருகையா, மாணிக்கமூர்த்தி, சீனிவாசன் ஆகியோர் அடங்கிய குழு நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியது.

1. சென்னையில் பணி நீக்கம் செய்யப்பட்ட ஒப்பந்த தோழர்களை மீண்டும் பணிக்கு அமர்த்து. வேலூரில் 18 தோழர்களை பணி நீக்க முயற்ச்சியினை கைவிடு
2. டில்லி 5.11.2008 உத்தரவுபடி ஊதியம் வழங்கு.

3. காவல் துறையை BSNL அலுவலகத்திற்குள் அனுமதித்து மிரட்டாதே.

இம்மூன்று கோரிக்கைகளை நிர்வாகம் தலைமை பொது மேலாளருடன் விவாதித்து பின்பு அறிவிப்பதாக கூறியது. நாமும் 18.11.2009 வரை காத்திருப்போம். **பிரச்சனை தீரவில்லையெனில் 19.11.2009 அன்று அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் BSNLEU & TNTCWU மாவட்டச்சங்கங்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்த மாநில சங்கங்கள் அறைகூவல் விடுக்கின்றன.**

கோரிக்கை தீரும் வரை போராடுவோம்.........

காண்ட்ராக்டர் மாறினாலும் ஒப்பந்த ஊழியர் மாறக்கூடாது என்ற நம் கொள்கை நிலையை உயர்த்தி பிடிப்போம்.

மாநில நிர்வாகம் நமது உள்ளக்குமுறலை புரிந்து செயல்படவேண்டும்.

இல்லையெனில் தமிழகத்தில் நடைபெற உள்ள போராட்டத்தை யாராலும் தடுக்க முடியாது.

**19.11.2009 உண்ணாவிரதப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்துங்கள்**...........

கடலூர், புதுவை, வேலூர் சென்னை மாவட்ட தோழர்களின் சிறப்பான பங்கேற்ப்பிற்க்கு மாநிலச் சங்கங்களின் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்..

தோழமையுடன்,

**தோழர். செல்லப்பா, BSNLEU**

**தோழர்.முருகையா,TNTCWU**